Day Class
86 A/L
'SOUND'
திரு சத்தியசிலன்
ஆரம்பம்:- 07-04-1986
Monday- 7-15- A. M
Mon - Fri - 7.15 A. M
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ-1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆ பங்குனி மீ 25 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 றஜப். பிறை 26 (07-04-1986) UTHAYAN - A LIVELY TAMIL DAILY கதிர்:120

Day Class
86 AL
'Sound'
திரு. சத்தியசிலன்
ஆரம்பம்: 07 - 04 - 86
Monday- 7. 15 A. M
Mon - Fri - 7. 15 A. M
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA

# யாழ் நகரில் நேற்று குண்டு வெடிப்புகள் ஷெல் தாக்குதல்கள்

## இருவர் மரணம் பலர் காயம்

— நல்லூர் செய்தியாளர் க. இரத்தினராஜசிங்கம் —

நல்லூர், ஏப்ரல் 7

யாழ்ப்பாணத்தில் நேற்று மீண்டும் குண்டு வெடிப்புக்களும், ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றன. இருவர் பலியானுர்கள் பத்துக்கும்மேற்பட்டோர் காயமடைந்தனர். கடைகள், ஹோட்டல்கள் வீடுகள் சேதமடைந்தன.

சம்பவம்பற்றித் தெரிய வருவதாவது,

நேற்றுக்காலைஎட்டரை மணி அளவில் சிப்பாய்கள் கோட்டையைவிட்டு வெளியே வர முயன்றனர்.

அப்போது போராளிகள் கைக்குண்டுகளை வெடிக்க வைத்தனர்.

சிப்பாய்கள் குண்டுகள் வெடித்த இடங்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அவர்கள் கோட்டைக்கு வெளியே உள்ள வெளிகளிலும் முனியப்பர் கோவிலுக்கு அருகிலும் படுத்தபடியும் நின்றுகொண்டும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

போராளிகள் பதில் தாக்குதல் நடத்தினர்.

இதனை அடுத்து யாழ். கோட்டைக்குள் இருந்து ஷெல் குண்டுகள் ஏவப்பட்டன.

யாழ். ரயில் நிலைய அதிபர் திரு. ஆர். சண்முகலிங்கத்தின் வீட்டிலும் ஒரு ஷெல் விழுந்து வெடித்தது.

அவருடைய குசினிக்குள் இருந்தசகலபொருள்களும் சேதமடைந்தன. வீட்டுக்காரர்கள் உயிர் தப்பினர்.

குருநகர் அண்ணசிலை அருகே விழுந்து வெடித்த மற்றொரு ஷெல்லினுல் ஆறுபேர் காயமடைந்தனர். ஒரு வீடு சேதமடைந்தது.

ஷெல் தாக்குதல்களினுல் காயமடைந்தோர் தனியார் மருத்துவ மனைகளிலும் வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டனர்.

சுமார் நான்கு மணி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### காயமடைந்தோர்

நல்லூர், ஏப் 7

நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற 'ஷெல்' தாக்குதல்கள், சூட்டுச் சம்பவங்கள் ஆகியவற்றில் காயமடைந்தோர் விவரம் வருமாறு:-

(1) வின்சலோ இராஜேஸ்வரி (26 வயது) குருநகர் - இவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது.

நான்கு பிள்ளைகளின் தாயான இவர் வீட்டு முற்றத்தில் நின்ற போது கரும்புகையுடன் வந்த ஏதோ ஒரு பொருள் வெடித்ததால் தனக்குக் காயம் ஏற்பட்டதாகத் தெரிவித்தார்,

(2) ஆல்போன்ஸ் சகாயதேவி (30 வயது) குருநகர்

(3) ஞானேந்திரன்யூட் குமார் (26 வயது) குருநகர்.

(4) சிறில் பாப்பா (14 வயது)

இவருக்கு முகத்தில் காயம்ஏற்பட்டு தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

(5) சண்முகராசா (16 வயது) திருநெல்வேலி.

இவருக்குக் கையில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### நள்ளிரவில் நடந்த ஷெல் தாக்குதல்

#### தாயும் மகளும் காயம்

நல்லூர், ஏப்ரல் 7

சனிக்கிழமை இரவு யாழ் கோட்டையில் இருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலினுல் தாயும் மகளும் காயம் அடைந்தனர். இவர்களின் வீடும் சேதம் அடைந்தது.

மக்கள் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த இரவு 2 30 மணி அளவில இந்த ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

யாழ் ஸ்ரீதர் படமாளிகைக்கு அருகில் உள்ள மங்கையற்கரசி என்பவரின் வீட்டின் மீதே ஷெல் விழுந்தது.

காயம் அடைந்த இருவரும் யாழ் பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவ நேரம் இவர்கள் வீட்டு ஹோலில் படுத்திருந்தனர்.

ஷெல் சுவாமி அறைக்குள் விழுந்ததால் இவர்கள் மயிரிழையில் காயங்களுடன் உயிர் தப்பினர்.

வீட்டின் சீற்றுகளும் ஓடுகளும் அறையும் பலத்த சேதமடைந்தன. காயமடைந்த இருவர் விவரமும் வருமாறு:

ஞானசேகரம் மங்கையற்கரசி (58 வயது) இவருக்கு காலில் காயம்.

விக்னேஸ்வரன் நாகேஸ்வரி (38 வயது) இவருக்கு தலையில் காயம்.

மற்றொரு ஷெல் தாக்குதலில் யாழ் கட்டுறவுச் சங்கக் கடையும் சேதமடைந்தது.

முச்சந்தி முனி



ஒன்றில் ஷெல் விழுகுது அல்லது கொள்ளை நடக்குது. எங்களின்ரை சனங்களின்ரை பாடு சிவராத்திரிதான் பாருங்கோ.

## பி.பி.சி. செய்தியாளர் தங்கிய ஹோட்டல் மீதும் ஷெல்விழுந்தது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 7

ஹோட்டல் அசோக்கின் மீதும் 'ஷெல்' விழுந்தது. இத்தகவலை பி.பி.சி. இலங்கைச் செய்தியாளர் திரு. ஹன்ப்ரி ஹோக்ஸ்லியே 'உதயனி'டம் தெரிவித்தார்.

ஹோட்டல்மீது 'ஷெல்' விழுந்த சமயம் தான் ஹோட்டலில் நிற்கவில்லை என்றும் யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் நின்றதாகவும் திரு. ஹோக்ஸ்லி சொன்னுர்.

''எனக்குக் கிடைத்தமயிர்க்கூச்செறியும் அனுபவம் இது'' — என்று திரு ஹோக்ஸ்லி உதயன் செய்தியாளரிடம் வர்ணித்தார்.

## பண்ணையில் பஸ்ஸை நோக்கிச் சூடு

### பிரயாணிகள் தப்பினர்

நல்லூர், ஏப்ரல் 7

நேற்று யாழ் நகரில் நடந்த சம்பவங்களின் போது பண்ணையில் இ. போ. ச. பஸ் ஒன்றும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானது.

சாரதியின் அதிவேக ஓட்டத்தினுல் பிரயாணிகள் காயம் இன்றித் தப்பினர். பஸ் அந்த இடத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

இதனையடுத்து பண்ணை வீதியால் செல்லும் போக்குவரத்துக்களும் சில மணிநேரம் ஸ்தம்பிதம் அடைந்தன. மாலையில் அப்பாதையால் போக்குவரத்துக்கள் மீண்டும் நடைபெற்றன.

### மரணமான இருவர்

நல்லூர், ஏப்ரல் 7

நேற்றைய சம்பவத்தில் மரணமானேர் விவரம் வருமாறு;

மனுவல் அந்தோனிப் பிள்ளை (வயது 30)

இவர் நான்கு பிள்ளைகளுக்குத் தந்தை.

மீன் பிடிப்பதற்காக சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது இவரைக் கோட்டையில் இருந்து வந்த துப்பாக்கிக் குண்டு தாக்கியது.

அந்த இடத்திலேயே இரத்தம் பீறிட்ட நிலையில் துடிதுடித்து மரணமானுர்.

சேவியர் சகாயரூபன் (26 வயது)

ஒரு பிள்ளைக்குத் தந்தையான இவர் குருநகர் பீச் றேட்டால் வந்து கொண்டிருக்கும் பொழுது ஷெல் தாக்கி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானுர்.

**சுபநேரம்**
**07-04-1986**
**திங்கட்கிழமை**

சுபநேரம்:
12.08 முதல் 1.38வரை
ராகுகாலம்:
7.38 முதல் 9.08 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

### ஆராதனை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 7

நேற்று யாழ் நகரில் இடம் பெற்ற குண்டு வெடிப்புகள், துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களால் கோட்டைக்கு சமீபமாக உள்ள கோயில்களில் ஞாயிறு ஆராதனைகள் பாதிக்கப்பட்டன.

## வல்வெட்டித்துறை கடலில் மீனவர் மீது தாக்குதல்

வல்வெட்டித்துறை,ஏப்.7

கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் தாக்கப்பட்டனர். அவர்களின் படகுகள், வலைகள் சேதம் ஆக்கப்பட்டன.

நேற்று வல்வெட்டித்துறை கடலில் இச்சம்பவம் நடந்தது.

முரளி (25வயது) நர்மு (40வயது) விநாயகமூர்த்தி(50வயது) பெரிய தம்பி (36 வயது) சோமு (32வயது) புத்திரசிகாமணி (28வயது) ராசு (32 வயது) ஆகியோரே தாக்கப்பட்டவர்கள் ஆவர்.

நான்கு படகுகளில் இவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்த சமயம் இச்சம்பவம் நடந்தது.

இவர்கள் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது தமக்கு அருகில் வரும்படி கடற்படையினர் சைகை காட்டினராம். இவர்கள் அருகில் சென்றபோது இவர்களது படகுகள் கடற்படைக் கப்பலுடன் பிணைக்கப்பட்ட பின்பே இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஒருவாறாக இவர்கள் தப்பி கரையை அடைந்தனர்.

சம்பவத்தில் காயம் அடைந்தோர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

### கடத்தப்பட்டார்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 7

குரும்பசிட்டியைச் சேர்ந்த கல்லுடைக்கும் இயந்திரத் தொழிற்சாலை உரிமையாளர் ஒருவர் நேற்று நண்பகலுக்குப் பின் இனம் தெரியாதவர்களினுல் அவரது இல்லத்திலிருந்து கடத்தப்பட்டார் என்று அறியப்படுகிறது.

## ★ துண்டுப் பிரசுரமும் துப்பாக்கிச் சூடும்

வல்வெட்டித்துறை, ஏப்7

வல்வெட்டித்துறைப் பகுதியில் நேற்றும் ஹெலிக்கொப்டரில் இருந்து துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன.

பின்பு ஹெலிக்கொப்டரில் இருந்து வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

இதனுல் இமையாணன், இலக்கணாவத்தை ஆகிய இடங்களில் சிலர் காயம் அடைந்தனர்.

# பீரங்கி படகு சேதம்

### ரெலோ உரிமை கோருகிறது

யாழ்ப்பாணம்,ஏப்ரல் 7

ஊர்காவற்றுறையில் கடல்கண்ணி வெடித் தாக்குதலில் சிக்கி கடற்படையின் பீரங்கிப் படகு ஒன்று சேதமானது என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை இரவு இத்தாக்குதல் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து கடற்படை முகாமில் இருந்து பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. ஷெல் தாக்குதல்களும் தொடர்ந்தன.

கடற்கரையைச் சுற்றிய பகுதிகளில் ஹெலிக்கொப்டர் ஒன்று வட்டமிட்டுத் தாக்குதல்கள் நடத்தியது.

இதனுல் அப்பகுதி மக்கள் பதற்றம் அடைந்தனர். மோட்டோர் ஷெல் தாக்குதல்களால் சிலவீடுகள் - கூரைகள் சேதமடைந்தன.

இதனிடையில் ஊர்காவற்றுறைக் கடல்கண்ணித் தாக்குதலுக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் உரிமை கோரியுள்ளது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில் கூறியிருப்பதாவது:

5-4-86 இரவு காரைநகர் கடல் கோட்டைக்கு அருகில் பரீட்சார்த்தமாக எம்மால் வைக்கப்பட்ட கடல் கண்ணி வெடியில் சிக்கிய நவீன பீரங்கிப் படகு ஒன்று சேதமானது.

சம்பவம் நடந்த சமயம் இப்பீரங்கிப் படகில் 40க்கு அதிகமான கடற்படையினர் சென்று கொண்டிருந்தனர்.

இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## கோண்டாவில், நீர்வேலியில் நேற்று வீதித்தடை

### கொள்ளைகளை எதிர்த்து

நல்லூர், ஏப். 7

கோண்டாவிலிலும் நீர்வேலியிலும் நேற்றுவீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டன.

மேற்கண்ட இருஇடங்களிலும்நடந்த கொள்ளைகளை ஆட்சேபித்தே பொதுமக்கள் வீதித் தடைகளை ஏற்படுத்தினர்.

கோண்டாவில் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:

நேற்று முன்தினம் சனிக்கிழமை கோண்டாவிலில் உள்ள புலவர் வீடியோ ஸ்தாபன உரிமையாளர் கே. பி. புலவரின் வீட்டில் கொள்ளை இடம்பெற்றது.

கொள்ளைபற்றிப் புலவர் தெரிவித்த விவரங்கள்வருமாறு:

நேற்றுமுன்தினம்சனிக்கிழமை வெள்ளை நிற

(4ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய அணுகுமுறை திருப்தி அளிக்கிறது

### 'ஜென்டில்மன்' சஞ்சிகைக்கு பிரபாகரன் பேட்டி

புதுடில்லி, ஏப். 6

தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் அணுகுமுறை எமக்குத் திருப்தி அளிக்கிறது

தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதி திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் இந்திய சஞ்சிகை ஒன்றுக்கு அளித்த பேட்டி ஒன்றில மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து வெளிவரும் 'ஜென்டில்மன்' ஆங்கில சஞ்சிகைக்கு திரு. பிரபாகரன் பேட்டி அளித்தார்.

ஜெயவர்த்தனவின் அணுகுமுறை எமக்கு முற்றாகத் திருப்தி அளிப்பதாக இல்லை.

ஜெயவர்த்தனவின் விடாப்பிடியான விட்டுக்கொடுக்காத போக்குத்தான் இந்திய அரசாங்கம் தீர்வுகாண உளமார எடுக்கும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக உள்ளது - என்றும் திரு. பிரபாகரன் சொன்னுர்

திரு. பிரபாகரனை 'ஜென்டில்மன்' சஞ்சிகையின் சார்பில் ஜஸ்விந்தர் சிங் பேட்டி கண்டார்.

பேட்டியின் சில பகுதிகள் வருமாறு;

கேள்வி: இலங்கையில் உள்ள தற்போதைய நிலைமை பற்றி எப்படி மதிப்பிடுகின்றீர்கள்?

பதில்: இலங்கையின் தற்போதைய நிலைமை மிகவும் ஆபத்தானது. இனக் கொலையைத் தமிழ் இனம் எதிர்நோக்கியுள்ளது.

இலங்கை ஆயுதப் படையினர் தமிழ்மக்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். படுகொலைகள், மானபங்கப்படுத்தல், தீவைப்பு முதலியவற்றுக்கு எமது மக்கள் இலக்காகி உள்ளார்கள். ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் சொந்த இடங்களில் இருந்து விரட்டப்பட்டுள்ளார்கள்.

யுத்த நிறுத்தம் என்ற போர்வையில் தமிழர்களை அழித்தொழிக்கும் வேலையில் ஈவிரக்கமற்ற முறையில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது.

இராணுவ வெறி கொண்ட சிங்களத் தலைமை நீதியான அமைதித் தீர்வு ஒன்றைக் கொண்டு வரும் உண்மை விருப்பம் கொண்டதாக இல்லை.

தமிழரை இராணுவ ரீதியில் அடக்கி வைக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டா உதவ தயார்

கொழும்பு, ஏப்ரல் 7

வேலை நிறுத்தம் செய்யும் தாதிகளின் பிரச்சினையில் தலையிட்டு உதவ அமைச்சர் தொண்டமான் முன் வந்துள்ளார்.

நுவரெலியாவில் வேலை நிறுத்தம் செய்யும் தாதிகள் கேட்டுக் கொண்டதன் பேரில் அமைச்சர் தொண்டமான் இதற்கு முன்வந்தார்.

அமைச்சர்கள் ரஞ்சித் அத்தபத்து, கனீத்ரா ரணசிங்கா ஆகியோர் கேட்டுக் கொண்டால் மட்டுமே தான் உதவுவார் என்று அமைச்சர் தொண்டமான் சொன்னுர்.

அமைச்சர் தொண்டமானின் கருத்து தலைவர்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

### வயாவிளானில் வயோதிபர் காயம்

நல்லூர், ஏப்ரல் 7

வயாவிளான் பகுதியைச் சேர்ந்தவரவேற்பிள்ளை கந்தையா (75 வயது) என்பவர் நேற்றுப் பகல் ஒரு மணி அளவில் வயலுக்குச் செல்லும் வழியில் சிறுடையினரின் துப்பாக்கி சூட்டுக்கிலக்கானுர்.

இதனுல் இவருக்கு காலில் காயம் ஏற்பட்டது.

அச்சுவேலி ஆஸ்பத்திரியில் இவர் முதலில் சேர்க்கப்பட்டு பின்னர் யாழ் பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டார்.

### கரம்பன்

#### குருவில் வீதியில் இலங்கை வங்கி

யாழ்ப்பாணம், ஏப். 7

இலங்கை வங்கியின் ஊர்காவற்றுறைக் கிளை திங்கட்கிழமை (இன்று) தொடக்கம் கரம்பன்,குருவில் வீதியில் உள்ள கட்டடம் ஒன்றுக்குத் தற்காலிகமாக இடமாற்றஞ் செய்யப்பட்டு உள்ளது.

கடந்த சில தினங்களாக இவ்வங்கிக்கிளை ஊர்காவற்றுறையில் இயங்க முடியாது இருந்தது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லரசுகளின் ஆதிக்கம் சர்வதேச பதற்றம்

## புதுடில்லி அரசியல் பிரகடன வாசகம் கோடிட்டுக் காட்டுகிறது

புதுடில்லி, ஏப்ரல் 6
வல்லரசுகளின் ஆதிக்கமும் குறுக்கீடும்தான் சர்வதேச பதற்ற நிலைக்கு காரணம்.

இவ்வாறு புதுடில்லி அரசியல் பிரகடன வாசகம் ஒன்றில் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இந்த மாதம் 16 ஆம் திகதி புதுடில்லியில் துவங்கவிருக்கும் மண்டல சார்பற்ற நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் இந்த வாசகம் பரிசீலிக்கப்பட இருக்கிறது.

அந்த வாசகத்தில் மேலும்;

எத்தனை முயற்சிகள் மேற்கொண்டும் பூசல்களும் சர்வதேச பதற்றங்களும் குறிப்பிடக்கூடிய அளவுக்குத்தானும் குறையவில்லை.

விண்வெளியானது மனித குலத்தின் பொது உரிமைச் சொத்தாகும்.

அமைதி நோக்கங்களுக்காகவே இது பயன்படுத்தப்படவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நூற்றுண்டின் இறுதிக்குள் புவியிலிருந்து அணு ஆயுதங்களை முற்ருக அகற்றிவிட சோவியத் யூனியன் தயாரித்துள்ள திட்டத்தை அந்த வாசகம் வரவேற்றுள்ளது.

## வெளி உலகில்

### ஹீத்ரோ விமான நிலையத்தில்

## இந்திய ஜம்போ ஜெட் அவசர தரை இறக்கம்

### 51 பிரயாணிகள் காயம்

லண்டன், ஏப். 6
லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் இந்திய விமானமொன்று அவசரமாகத் தரையிறக்கப்பட்டதால் அதிலிருந்த பிரயாணிகள் 51 பேருக்கு காயங்கள் ஏற்பட்டன.

காயங்களுக்கு உள்ளான பிரயாணிகள் உடனடியாக லண்டன் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

விமானத்தில் குண்டு வைக்கப்பட்டுள்ளது என்ற புரளியை அடுத்தே இந்த விமானம் அவசரமாக அங்கு மீண்டும் தரை இறக்கப்பட்டது.

தொடர்ந்து விமானத்தின் எல்லாப் பகுதிகளும் கவனமாக சோதனையிடப்பட்டதாகவும் எனினும் வெடிகுண்டு எதுவும் அங்கு இருக்கக் காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஹீத்ரோ விமான நிலையத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த இந்த ஜம்போ ஜெட் விமானத்தில் 305 பயணிகள் இருந்ததாக மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியன் எயர்லைன்ஸ் நிறுவனத்துக்கு இந்த விமானம் சொந்தமானதாகும்.

## பிலிப்பீன்ஸ் கடன் கேட்கிறது

மணிலா, ஏப். 5
பிலிப்பீன்ஸ் அரசாங்கம் சர்வதேச நாணய சபையிடம் கடனுதவி கோரியுள்ளது.

## அஸாம் மாணவர் மீது பொலீஸ் தாக்குதல்

### 10 மாணவருக்கு துப்பாக்கிச் சூடு

புதுடில்லி, ஏப். 6
அஸாம் மாநிலத்தில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது 6 பேருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன. 4 பேருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன.

மாணவர்கள் ரயில் ஒன்றை மறிப்பதற்கு முயன்றபோதே நிலைமையைக் கட்டுப்படுத்த பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது.

இடைநிலைப் பாடசாலைகளில் அஸாம் மொழியை கட்டாய பாட மொழியாக்கும் விவகாரமே இந்த மறியல் இயக்கத்துக்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஒருமைப்பாட்டுக்கு உறுதிமிகு அத்திவாரம் அன்புதான் என்கிருர் ஆம்தே

அமிர்தசரஸ், ஏப் 6
அன்பென்னும் அத்திவாரத்தில் பாரததேசிய ஒருமைப்பாடு உறுதியாகக் கட்டி வளர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு பாரதத்தின் விடுதலைப் போராட்ட வீரர் பாபா ஆம்தே மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

தேசிய ஒருமைப்பாட்டுப் பணியில் தம்மை ஈடுபடுத்தியுள்ள 100 தொண்டர்களுடன் பாபா ஆம்தே சமாதானப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

அமிர்தசரஸில் மக்கள் மத்தியில் பேசும்போதே மேற்கண்ட வேண்டுகோளை அவர் விடுத்தார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில்;

பாரத நாட்டின் பெருமையும் புகழும் அதன் ஆத்மீகச் செல்வங்களிலேயே செழுமையடைந்த சிறப்புக்குரியவையாகும்.

அந்தப் பண்பு நலன்கள் மேலோங்கவும் மேலும் பயன் தரவும் பாரத மக்கள் ஒரு குடி மக்களாக உணர்வூட்டம் பெறவேண்டும் என்ருர்.

பொற்கோயில், துர்கையாணு போன்ற தலங்களுக்கும் தமது சக தொண்டர்களுடன் அவர் யாத்திரை போருர்.

## 'லைசென்ஸ்' இல்லாத ஒரே தொழில் சினிமாதான்!

திரையுலகின் வெற்றிப் படத் தயாரிப்பாளர்கள் வரிசையில் திகழும் சிலரில் ஒருவர்தான் தயாரிப்பாளர் கே ஆர். ஜி.

சிகப்பு ரோஜாக்கள் திருப்பம், ஆலய தீபம், கடல் மீன்கள், துடிக்கும் கரங்கள், ஜானி, நெஞ்சில் ஒரு ராகம், உன்னைத் தேடி வருவேன் போன்ற படங்கள் கே ஆர் ஜி யின் வெற்றிப் படங்களில் சில.

கே ஆர். ஜி கூறுகிருர்:

இன்று திரைப்படங்களைத் தயாரிப்பதாகச் சொல்லிக் கொண்டு நூற்றுக் கணக்கான பேர் வந்துவிட்டனர்.

ஆனால் சினிமாத் தயாரிப்புக்கெனத் தங்களை நிஜமாக அர்ப்பணித்துக் கொண்டுள்ளவர்கள் ஒரு சில பேர் தான்!

ஆண்டு தோறும் — 140 படங்கள் வெளியாகிறதென்ருல், அதில் நிஜமாக படத் தொழிலில் ஈடுபட்டவர்கள் வெகு சிலர் மட்டுமேதான் இருப்பார்கள்.

எத்தனையோ தொழில்களுக்கு 'லைசென்ஸ்' இருக்கிறது ஆனுல் 'லைசென்ஸ்' இல்லாத ஒரே தொழில் சினிமாதான்!

சுமார் 25 ஆயிரம் ரூபாவை வைத்துக் கொண்டு படப்பூஜை மட்டும் போட்டு, அந்த மனிதர் தயாரிப்பாளர் என்ற அந்தஸ்தைப் பெற்றுவிடலாம். அந்த நிலைமைக்கு அடி எடுத்து வைத்திருக்கிறது சினிமா உலகம்.

ஆனுல் எங்களைப் போன்ற பத்துப்பதினைந்து கம்பனிகளுக்கு மட்டுமே சினிமாத் தொழில் அன்றாடத் தேவையாக இருக்கிறது.

குறைந்த பணத்தில் பூஜைபோட்டு படம் தயாரிப்பவர்களைப் பற்றி நான் குறை சொல்லவில்லை.

ஆனுல் அத்தகையோரால் சில பிரச்சினைகள் எழுகின்றன. பெரிய நட்சத்திர அந்தஸ்தோடு எடுக்கப்படும் படத்திற்கு 50 லட்சம் வரை செலவாகிவிடும். புதிய நட்சத்திரங்களைப்போட்டு படம் எடுத்தால் 30 லட்சம் வரை செலவாகும்.

இதனுல் தயாரிப்பாளர்களுக்கு பாரிய நஷ்டம் ஏற்படுகிறது" என்ருர் கே. ஆர். ஜி.

## லிபியாவுக்கு எதிராக அமெரிக்கா சதி முயற்சி

நியூயோர்க், ஏப். 6
லிபியா ஜனுதிபதி கடாபிக்கு எதிரான சதியை உருவாக்க அமெரிக்கா முயற்சி செய்கிறது.

நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை இவ்வாறு செய்தி வெளியிட்டுள்ளது.

லிபியாவுக்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகள் லிபியாவின் வன்செயல்கள் காரணமாக அல்ல, என்று அமெரிக்க நிர்வாக உத்தியோகத்தர்களை மேற்கோள் காட்டி இப்பத்திரிகை செய்தி வெளியிட்டது.

## தடைநீக்கம்

சோவெட்டோ, ஏப். 6
தென் ஆபிரிக்க விடுதலைப் போராட்ட வீராங்கனை திருமதி வினி மண்டெலாவுக்கு எதிரான தடையை அரசு நீக்கிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொலையாளிகளை தேடி பஞ்சாப் வலைவிரிப்பு

### முதலமைச்சர் பர்னுலா உத்தரவு

சண்டிகார், ஏப் 6
பஞ்சாப் ஜலந்தர் கொலையாளிகளை வலையில் அகப்படுத்தும் வேலைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

முதலமைச்சர் பர்னுலா ஜலந்தர் பகுதிகளில் சல்லடை போட்டு தேடுமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

6 பொலீஸாரும் சட்டத்தரணியொருவரும் நீதிமன்றம் ஒன்றில் சுட்டுக் கொலை செய்யப்பட்டது தொடர்பாகவே இந்த தீவிர நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கிறது.

காரொன்றில் வந்த ஆயுதந்தாங்கியகோஷ்டி ஒன்றே இந்தக் கொலைகளைச் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## உபஜனுதிபதி குணமடைந்தார்

புதுடில்லி, ஏப். 6
டில்லி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பாரத உபஜனுதிபதி ஆர். வெங்கட்ராமன் பூரணசுகத்துடன் வீடு திரும்பியுள்ளார்.

அறுவை சிகிச்சையொன்று அவசரமாக அவருக்குமேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பிரான்ஸ் உத்தரவு

பாரிஸ், ஏப் 6
லிபியாவின் இராஜதந்திரிகள் இருவரைஉடனடியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு பிரான்ஸ் அரசு உத்தரவிட்டுள்ளது.

உலகெங்குமுள்ள அமெரிக்க நலநிலைகளில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும் என்ற கடாபியின் அறிவிப்பை அடுத்தே இந்த வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## தீவிரவாதிகளை விட்டு ஒதுங்கியிருங்கள்

### வடக்கு, கிழக்கு மக்களுக்கு கூட்டுப்படைத் தளபதி அறிவுரை

கொழும்பு, ஏப். 7
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்கள் தீவிரவாதிகளுக்குப் புகலிடம் அளிக்கக் கூடாது; சேர்ந்து இருக்கவும் கூடாது. தீவிரவாதிகளை விட்டு ஒதுங்கியிருக்க வேண்டும்.

இப்படி கூட்டுப்படைகளின் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிறில் ரணதுங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பதில் தாக்குதல்களில் படையினர் ஈடுபடும் போது தாக்கப்படாமல் இருக்கவே இந்த வேண்டுகோள் விடுக்கப்படுகிறது என்று கூறப்பட்டது

## கடலில்வீழ்ந்த பிரசுரங்கள்

காங்கேசன்துறை, ஏப். 7
கரையோரப் பகுதிகளில் போடப்பட்ட பிரசுரங்கள் கடலில் வீழ்ந்தன.

ஹெலிகொப்டர் ஒன்று பிரசுரங்களை வீசியபடி சென்றது.

## 2-வது நினைவு அஞ்சலி



வே. க. இராசசுந்தரம்

தோற்றம்: 25-01-1905 மறைவு: 31-03-1984

எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் திகழ்ந்து நம்மை நல்வழி இட்டு வளம் காண வசதி செய்த அன்புத் தெய்வத்திற்கு எமது இதயபூர்வமான அஞ்சலிகள்.

திதி. சதுர்த்தசி
07-04-1986
செறிடேல், சங்கானை.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## சனசமூக நிலையங்கள் நல்ல கருத்துக்களை நமது மக்கள் முன் வைக்க வேண்டும்

### ஆணையாளர் கூறுகிருர்

நல்லூர், ஏப். 7
சனசமூக நிலையங்கள் நல்ல கருத்துக்களை மக்கள் முன்வைக்க வேண்டும். சமூகத்தில் இருக்கும் பிரச்சினைகளை சகல இனத்தவரும் இணைந்து தீர்க்கவேண்டும்

கொட்டடியில் நிறுவப்பட்டுள்ள சோலைபுரம் கவி பாரதி சனசமூக நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் இப்படித் தெரிவித்தார்.

சோலைபுரம் கவிபாரதி சனசமூக நிலையத் தலைவர் பொன்னர் பழனிச்சாமி தலைமையில் விழா நடைபெற்றது.

ஆணையாளர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இப்பகுதிகளில் அநேக மக்கள் சட்டவிரோதமாக மின்சாரத்தை பெற்றிருக்கிருர்கள். இதை நான் என் கண் முன்னுலேயே பார்த்திருக்கிறேன்.

எனவே இப்படியான செயல்களை மக்கள் நிறுத்த வேண்டும்.

குறைந்த செலவில் கூடிய மின்சாரம் வழங்க திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளது.

இப்படி அவர் கூறினுர்.

நாவாந்துறை பங்குத் தந்தை பீ எம். இம்மானுவல் உரையாற்றும் போது. இன்றைய நிலையில் எமக்கு இளைஞர்களின் ஒற்றுமைதான் தேவை. அவர்கள் ஒன்று திரண்டால்தான் இப்படியான நிலையங்களை அமைக்க முடியும் என்ருர்.

"மில்க்வைற்" அதிபர் திரு. க. கனகராசா அங்கு மரம் ஒன்றை நட்டார்.

பாடசாலைப் பிள்ளைகளுக்கான அரிச்சுவடிகளையும் பாலர் புத்தகங்களையும் அவர் வழங்கினுர்.

மற்றும் யாழ் மராமத்துப் பொறியியலாளர் எம். நடராசா, அ. தி. மு. க பொதுச் செயலாளர் பொன் மதிமுகராசா, ஜனுப் எம். காசிம் எஸ். சிவரத்தினம் ஆகியோரும் [illegible] உரை நிகழ்த்தினர்.

## 6 தமிழர்கள் கொலை தொடர்பாக 3 சிங்களவர் கைது

திருகோணமலை, ஏப். 7
மார்ச் 5ஆம் திகதி கன்னியா, மாங்காயூற்று என்னுமிடத்தில் 6 மலையகத் தமிழர் வெட்டிக் கொலை செய்யப்பட்டது தொடர்பாக 3 சிங்களவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இப்பயங்கரச் சம்பவத்தில் உயிர்தப்பிய 23 வயதான முருகையா சாந்தகுமார், சந்தேக நபர்களில் இரண்டுபேரை அடையாளம் காட்டினுர்

அடையாள அணிவகுப்பு சலியன்று திருகோணமலைப் பதில் நீதிவான் திரு. எம். கே. செல்லராசா முன்னிலையில் நடைபெற்றது.

மூன்று சந்தேக நபர்களான என். ஜே. சுனில், எச். பி. ஜயந்த லலித், டபிள்யு. எல். பி. சிறிசேன அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்பட்டனர்.

இவர்களில் முதல் இரண்டுபேரையும் முருகையா சாந்த குமார் அடையாளங் காட்டினுர்.

அதன்பின்னர் சாட்சியமளிக்கையில் [illegible] கூறியதாவது:

இச்சம்பவத்தில் இறந்தவர்களில் ஒருவரான தவமணிதேவி எனது அம்மா.

சம்பவதினம் காலை 7 மணியளவில் நானும் அம்மாவும் வண்டில் ஒன்றில் விறகு வெட்டக் காட்டிற்குச் சென்ருேம். அச்சமயம் சந்தேக நபர்கள் எதிரே வந்தனர். காட்டினுள் தங்களுக்கும் விறகு வெட்டவேண்டும் என்றும் சந்தேக நபர்கள் கேட்டுக்கொண்டனர். சம்மதம் தெரிவித்து அவர்கள் பின்னுல் சென்ருேம்.

திடீரென்று இருவரின் கைகள் கால்களை சந்தேக நபர்கள் கட்டினர். பின்னர் எம்இருவரையும் வெட்டினர். அம்மாவை வெட்டுவதை நான் என் கண்களால் கண்டேன்.

எப்படியோ நான்தப்பி அரிசி ஆலைப் பக்கமாக ஓடினேன். ஆலைக்குள் நான்கு பிரேதங்கள்கிடப்பதைக் கண்டேன்.

இப்படி சாட்சி சொன்னுர்.

[illegible] 21க்கு ஒத்திவைக்கப்பட்டது.

## தீர்வுகாண மகாசங்கம் ஈடுபாடு

கொழும்பு, ஏப். 7
ஜாதிகள் வேலை நிறுத்தத்துக்கு தீர்வுகாணுவதில் மகாசங்கம் ஈடுபடுகின்றது.

பாரத தேஷ்ய பிரதம குரு வண. ஹெடிகெல்ல பன்னதிஸ்ஸ, மல்வத்தை, அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களை இது சம்பந்தமாகச் சந்தித்துப் பேசினுர்.

தாதிமார் சங்கத்துக்கு தேரர் ஒருவர் தலைவராக இருக்கும்வரை தாதிமார் சங்கத்துடன் பேசப் போவது இல்லை என்று ஜனுதிபதி அறிவித்து உள்ளது தெரிந்ததே.

## மக்கள் முகம்

### சாவகச்சேரி மக்கள் அவை

சாவகச்சேரி, ஏப் 7
சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான மக்கள் அவை அமைப்புக் கூட்டம் இளைப்பாறிய அதிபர் திரு. சி. சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அமைப்பாளர் திரு. ச. செந்தூராசா, வி. எஸ். துரைராசா, கே. எம். சிவகுரு ஆகியோர் விளக்க உரை அளித்தனர்.

உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு. சி. கனகசபாபதி செயலாளர்:- அதிபர் திரு. கே சிவபாதசுந்தரம் பொருளாளர்:- அதிபர் திரு. க. பாலச்சந்திரன்.


எமது புதிய ORIGINAL வெளியீடுகள்

1. இரண்டுமனம் (Thomsun Original)
2. வீட்டுக்காரி (Thomsun Original)
3. நீதியின் மறுபக்கம் (Thomsun Original)
4. ஆஷா (V-G-P- Original)
5. சமயபுரத்தாளே சாட்சி (V-G-P- Original)
6. பார்த்த ஞாபகம் இல்லையோ (V-G-P- Original)
7. சுயரூபம் (V-G-P- Original)
8. மிஸ்டர் பாரத் (Pyramid Original)
9. கீதாஞ்சலி (Suhan Original)
10. சிவப்புக்கிளி (Suhan original)

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665


## நன்றி நவிலல்



எங்கள் குலவிளக்காய், மனைத்தக்க மாண்பு பேணி மகாசிவராத்திரி புண்ணிய தினத்தன்று சிவப்பேறடைந்தவராகிய அன்னையின் அமரத்துவம் அறிந்து ஆறுதல்கள் அளித்தோர்க்கும் உடனிருந்து உதவினோர்க்கும் உறுதுணை நின்ருேர்க்கும் இறுதிக்கிரியைகளிற் கலந்து தேறுதல் தந்தோர்க்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்ருேம்.

அன்பு
மக்கள்: செ. சிவகுணநாதன்,
செ. சற்குணநாதன்,
செ. ஜெகநாதன்,
மா. தவநிதி,
மருமகன்மார்,
சண்டிலிப்பாய் மருமகன்: மு. மாசிலாமணி
07-04-1986. பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

ஆணவ முனைப்பு நீங்கினால் நமக்கு ஆண்டவன் நினைப்பு ஏற்படும். அப்போதுதான் நம் வாழ்வில் மறுமலர்ச்சியும் மனச் சந்தோஷமும் உண்டாகும்.

சுவாமி விவேகானந்தர்.


உதயன்

இல: 15, 2வது ஒழுங்கை, பின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 07-04-86

தொலைபேசி: 24805 22073 த. பெ. 23


## ஆசிரியர்களின் சேவை மகத்துவம்

அவர் ஓர் ஆசிரியை. அவர் கல்வி கற்பிக்கும் பாடசாலை வீட்டில் இருந்து தொலைவில் இருந்தது. அதனால் காலையில் வரும்போது மத்தியானச் சாப்பாட்டையும் எடுத்து வருவார். வழமைபோல் அன்றும் மத்தியானச் சாப்பாட்டுப் பொதியுடன் பாடசாலைக்கு வந்தார்.

பாடசாலை அலுவலகத்திற்கு வேறு வேலையாகச் சென்றவருக்கு, அரை நாள் லீவைத் தான் இன்னும் பயன்படுத்தாமல் இருப்பது தெரிய வந்தது. அந்த லீவை எப்படியும் எடுத்துத் தீர்த்துவிட வேண்டும் என்று அவர் மனம் சொல்லியிருக்க வேண்டும். அதனை அன்றைக்கே எடுக்கத் தீர்மானித்தார்.

அரை நாள் லீவிற்கு விண்ணப்பித்தார். கட்டிக்கொண்டுவந்த மத்தியானச் சாப்பாட்டைத் திரும்பவும் காவிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினார்.

அந்த அருமந்த அரைநாள் லீவை ஏன் அரசாங்கத்துக்கு விட்டுக் கொடுக்க வேண்டும். அதனை எடுத்து அனுபவித்து விடுவோமே என்று எண்ணியிருக்க வேண்டும் அந்த ஆசிரியை.

யாழ்ப்பாண மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம், ஆசிரியராக இருந்த காலத்தில் இப்படி ஒரு சம்பவம் நடந்தது.

காங்கேசன்துறை கல்வி வட்டார அதிபர்களின் கூட்டத்தில் அண்மையில் உரையாற்றுகையில் கல்விப் பணிப்பாளர் இந்தச் சம்பவத்தை நினைவு கூர்ந்திருக்கிறார்.

லீவு எடுப்பது தங்களின் உரிமைகளில் ஒன்று என்று ஆசிரியர்கள் பலர் நினைக்கிறார்கள். அதனால் தமக்கு அது தேவைப்படாவிட்டாலும் எடுத்துத் தீர்த்தாக வேண்டும் என எண்ணுகிறார்கள். அதனைச் செயலிலும் காட்டுகிறார்கள்.

ஆசிரியர்களும் மனிதர்கள். அவர்களுக்கும் அவசர வேலைகள் இருக்கும். சுகயீனம் வரும். அதனால் லீவு தேவைப்படலாம். தேவை கருதி ஆசிரியர்கள் லீவு எடுப்பதற்கு எவரும் கட்டுப்பாடு விதிக்கக்கூடாது; கண்டிக்கவும் முடியாது.

அவசரத் தேவை எதுவுமில்லாமலே லீவைப் பயன்படுத்தி முடித்துவிட வேண்டும் என்பதற்காக லீவு எடுக்கும் ஆசிரியர்களைக் கண்டிக்காமல் இருக்க முடியாது. அவர்கள் ஆசிரியர் தொழிலுக்குப் பொருத்தம் அற்றவர்கள்.

வாரத்தில் இரண்டு நாள் ஓய்வு. வருடத்தில் சுமார் மூன்று மாதங்கள் தவணை லீவு என்ற வகையில் ஓய்வு. இந்தளவு ஓய்வுக்குப் பின்னரும், அவசரத் தேவைக்கு அல்லாமல் லீவு எடுக்கும் ஆசிரியர்களை மாணவர் கல்வியில் அக்கறை இல்லாத பிரகிருதிகள் என்றே கொள்ள வேண்டும்.

கல்வி சமூகத்தின் பெரும் செல்வம். அந்தக் கல்வியை வருங்காலச் சந்ததியினருக்கு ஊட்டும் ஆசிரியர்கள், சமூகத்தின் பிரதான சேவையாளர்கள். மதகுரு, வைத்தியர்களுக்கு அடுத்தவர் கல்விக்குரு — ஆசிரியர். இவ்வாறு சமூகத்தில் முதலிடம் கொடுத்து மதிக்கப்பட்டார்கள் ஆசிரியர்கள்.

ஒரு குழந்தையின் எதிர்கால வாழ்க்கையை, ஒழுக்கத்தை, பண்பை, குணநிசயங்களை உருவாக்கும் மிகப் பெரிய பொறுப்பும் ஆசிரியர்களிடமே உண்டு.

அதனாலேயே சரித்திர காலம் தொடக்கம் குருவுக்கு சமூகத்தில் விசேஷ அந்தஸ்து வழங்கப்பட்டது. அவர்களது பணி வெறும் தொழில் மட்டுமல்ல. மனித சேவையுமாகும்.

ஆனால் இப்போதைய ஆசிரியர்களில் பலர் தமது தொழிலின் மகத்துவத்தைப் புரியாதவர்கள் — அதனைக் கெடுத்து விடுபவர்கள். அவர்கள் அடிக்கடி லீவு எடுத்து மாணவர் கல்வியைப் பாழடிக்கிறார்கள். பாடசாலைகளில் உரியவாறு கற்பிக்காமல் மாணவரை ரியூட்டரிக் கல்விக்கு இட்டுச் செல்கிறார்கள். மாணவர்களுக்கு முன்பாகவே புகை பிடித்தும் மது அருந்தியும் இளம் சந்ததியைக் கெடுக்கிறார்கள்.

விதிமுறைகளை வகுத்தோ, சட்டங்களை இயற்றியோ அவர்களைத் திருத்துவது கஷ்டம். அவர்கள் தாமாகத் திருந்த வேண்டும். இல்லையேல் அவர்களை ஆசிரிய சேவையிலிருந்து நீக்கி விடுவதே சிறந்த மார்க்கம்.

மாணவரின் கல்வியில் அக்கறை இல்லாதவர்கள், அவர்களுக்கு உரியவாறு கல்வி புகட்டாதவர்கள், அவர்களை தீயவழிக்கு இட்டுச் செல்பவர்கள் ஆசிரியர் தொழிலுக்கு அருகதை அற்றவர்கள். அவர்கள் தெரிந்து தெரியாமல் ஆசிரிய சேவைக்கு வந்து விட்டால் எப்படியாவது அகற்றி விடவேண்டும்.

அப்படிச் செய்வதன் மூலமே வருங்காலச் சந்ததியை நாம் காப்பாற்ற முடியும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில்

# படையினரால் விடுவிக்கப்படுவோர் பிரஜைகள் குழுவிடம்

மட்டக்களப்பு, ஏப். 7

மட்டக்களப்பில் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்படுவோர் இனிமேல் பிரஜைகள் குழுவிடம் ஒப்படைக்கப்படுவர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய இணைப்பதிகாரி மேஜர் டொனல்ட் மெண்டிஸ் இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாக உறுதி அளித்தார்.

மட்டக்களப்பு பிரஜைகள் குழுத் தூதுக்கோஷ்டி, அதன் தலைவர் திரு வே. தங்கவடிவேல் தலைமையில் புதிய இணைப்பதிகாரியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது. தூதுக்குழுவில் செயலாளர் திரு. சாம் தம்பிமுத்து, வணபிதா சந்திரா பெர்னாண்டோ, திரு. பிறின்ஸ் காசிநாதர் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

படையினர் கைது செய்து, விசாரணையின் பின் விடுவிக்கப்படுவோர் இப்போது பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் மூலமே வீடு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

பொலீஸார் அவர்களை இரண்டொரு நாட்கள் தமது பாதுகாப்பில் வைத்திருந்த பின்னரே வீடு செல்ல அனுமதிக்கின்றனர்.

இந்தத் தாமதத்தை நீக்கும் பொருட்டு, இனிமேல் கைதாகி விடுதலை செய்யப்படுவோரை பிரஜைகள் குழு மூலமே விடுவிக்க ஏற்பாடு செய்வதாக இணைப்பதிகாரி தூதுகோஷ்டிக்கு உறுதி அளித்தார்.

## கலை, கலாசாரத்தை பாதுகாக்க பொதுமக்கள் முன்வரவேண்டும்

வட்டுக்கோட்டை, ஏப். 7

எமது பாரம்பரிய கலை, கலாசாரத்தை அழிய விடாது பேணிப் பாதுகாக்க பொதுமக்கள் அனைவரும் முன்வர வேண்டும்.

வட்டுக்கோட்டை கலா நிலையத்தில் நடைபெற்ற பருவகால இசை நிகழ்ச்சியின் போது சங்கீத வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். கணபதிப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

வட்டுக்கோட்டை கலா நிலைய கவின் கலை மாணவர் மன்றத் தலைவி செல்வி சாமினி சிவஞானம் தலைமையில் இந் நிகழ்ச்சி நடைபெற்றது.

திரு. கணபதிப்பிள்ளை தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:–

எமது நாட்டிலுள்ள கலைஞர்கள் பலர் கலை வளர உயிர் கொடுத்து வருகின்றனர்.

எமது கலா நிலைய வயலின் வித்துவான் திரு ச. வெங்கடேஸ்வர சர்மா தன்னலம் கருதாது, தான் கற்ற கலையை ஏனையவர்களும் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற பெரு நோக்கோடு கற்பித்து வருகின்றார்.

இக்கலைஞரிடம் பொழுதுபோக்குக்காக கற்ற மாணவிகள் பலர் இன்று பட்டதாரிச் சம்பளத்தைப் பெறுகின்றனர்.

இப்படி அவர் கூறினார்.

வட்டுக்கோட்டை கலா நிலைய சங்கீதவித்துவான் திருப. முத்துக்குமாரசாமி சர்மா, கலா நிலைய முதல்வர் திரு. க. கயிலாயநாதன், மூளாய் அ. மி. பாடசாலை அதிபர் திரு. நா. முருகையா ஆகியோர் உட்பட மற்றும் பலரும் இங்கு உரையாற்றினர்.

## சிறுவிவசாயிகள் சம்மேளனம் ஏன்?

### அதிகாரி விளக்கம்

நீர்வேலி. ஏப்.7

சிறு விவசாயிகளின் குறைபாடுகளை உடனுக்குடன் அதிகாரிகளுக்கு முறையீடு செய்து குறைகளை நிவர்த்தி செய்வதற்காகவே விவசாயக் கிராமங்கள் தோறும் சிறு விவசாயிகள் சம்மேளனங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன.

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபத்தில் சிறுவிவசாயிகள் சம்மேளனத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் வடபகுதி கமநல சேவைகள் திணைக்கள சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், பயிர் நோய்களையும், கால நடை வளர்ப்பினால் ஏற்படும் கஷ்டங்களையும் உடனுக்குடன் அதிகாரிகளுக்கு அறிவித்து நிவாரணம் பெற வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

கிராமத்திலுள்ள சகல விவசாயிகளும் இதில் அங்கத்துவம் பெறுவதன் மூலம் இந்த அமைப்பு பலமடையும் எனவும் அவர் குறிப்பிட்டார்

பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. ச. இ. தவராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் விவசாயிகள் சார்பில் திரு த. பரராசசிங்கம், திரு. சி. நமசிவாயம், திரு. அ. பூதத்தம்பி, த. மயில்வாகனம் ஆகியோர் பேசினர்.

## அமெரிக்க பல்கலைக்கழகங்களில் கழுத்தறுப்பு

கொழும்பு, ஏப். 7

அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் கழுத்தறுப்புத் தலைமுறையினரின் ஆதிக்கம் தான் உருவாகியுள்ளது.

சொந்த லாபங்களை வளர்ப்பதே இந்த ஆதிக்கத்தின் நோக்கம்.

அமெரிக்கப் பல்கலைக்கழகப் பேராசிரியர் காரி வீவர் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

பஸ்ஸில் கொள்ளை

## பிடிபட்ட இளைஞர் தப்பி ஓடினார்

கல்முனை, ஏப்.7

மட்டக்களப்பு— பொத்துவில் வீதியில் சென்றுகொண்டிருந்த இ.போ.ச. பஸ்ஸில் ரிவோல்வரைக்காட்டி கண்டக்டரிடம் இருந்த பணத்தை இனந்தெரியாத இளைஞர் ஒருவர் கொள்ளை அடித்தார்.

பாண்டிருப்புக்கு அருகில் வைத்து இச்சம்பவம் நடந்தது

கண்டக்டரிடமிருந்த பணத்தைப் பறித்துக் கொண்டு அந்த இளைஞன் ஓடுகையில், ஊர்வாசிகள் இளைஞனைப் பிடித்து கிராமசேவையாளரிடம் ஒப்படைத்தனர்.

பொலீஸார் கிராம சேவையாளரின் வீட்டுக்கு தகவல் கிடைத்து விரைந்து வந்தனர்

ஆனால் அந்த இளைஞனைப் பூட்டி வைத்த அறையை பொலீஸார் திறந்து பார்த்தபோது, இளைஞனைக் காணவில்லை. ஆனால் ரிவோல்வர் மட்டும் அறைக்குள் கிடந்தது.

இளைஞன் தப்பி ஓடியது அப்போது தான் தெரிந்தது.



பொய்யாமொழி

குறள்:

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தம்போற் செயின்

பொருள்:

பிறர் பொருளையும் தம்பொருள் போல் போற்றிச் செய்தால் அதுவே வாணிகம் செய்வார்க்கு உரிய நல்ல வாணிக முறையாகும்.

# 2 வருடமாக குழாய் இணைப்பு இல்லை

## கட்டுவன்புலம் வித்தியாலய மாணவர் அவதி

பலாலி, ஏப். 7

இரண்டு வருடங்களுக்கு முன்பு கட்டி முடிக்கப்பட்ட தண்ணீர்த் தாங்கி குழாய் இணைப்புச் செய்யப்படாத நிலையில் உள்ளது.

இந்த அவலநிலையை பாடசாலை அபிவிருத்திச் சபைகல்விப்பணிப்பாளரினதும், அரசாங்க அதிபரினதும் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

கட்டுவன்புலம் மகா வித்தியாலயத்தில் மாணவர்களது குடிதண்ணீர் பிரச்சினையை தீர்க்க அதிபரதும் கல்வித் திணைக்களத்தினதும் முயற்சியால் 1984ஆம் ஆண்டு தண்ணீர்த் தாங்கி ஒன்று கட்டிமுடிக்கப்பட்டது

தண்ணீர்த் தாங்கிக்குத் தேவையான மின்மோட்டார் ஒன்றை பாடசாலை அபிவிருத்திச்சபை தனது செலவில் வாங்கியது.

இதற்காக குழாய் இணைப்பை கல்வித்திணைக்களம் கடந்த வருடம் சிபார்சு செய்திருந்தும், யாழ்ப்பாண நிர்வாகச் செயலக அபிவிருத்திப் பிரிவு நிதிக்குறைவால் இந்த ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தவில்லை.

இதனால் நீண்டகாலமாக குடிதண்ணீர் பிரச்சினையால் பாதிக்கப்பட்டு வந்த மாணவர்களும், ஆசிரியர்களும் தொடர்ந்தும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பாக கல்விப் பணிப்பாளரையும், அரசாங்க அதிபரையும் சந்திக்க இவ்வாரத்தில் அதிபர் தலைமையில் ஒரு குழு செல்லவுள்ளதாகப் பாடசாலை அபிவிருத்திச் சபையின் செயலாளர் திரு. க. வேலாயுதம் தெரிவித்தார்.

## அக்கரைப்பற்றில் 87 குடும்பங்கள் பெரும் அளவு பாதிப்பு

கல்முனை, ஏப்ரல் 7

"அக்கரைப்பற்று அரசினர் வைத்தியசாலையில் பொலிஸ் கமாண்டோப் படையினர் முகாமிட்டுள்ளதால் அப்பகுதியிலிருந்த 87 குடும்பங்கள் தங்கள் சொந்த வீடு வளவு, நாளாந்த வருமானம், பிள்ளைகளின் கல்வி அனைத்தையும் இழந்து அனாதைகளாக்கப்பட்டுள்ளனர்.

சுண்ணாம்பு சுட்டு சீவியம் நடத்தும் இவ்ஏழைத் தொழிலாளர்களது எதிர்காலம் நம்பிக்கையற்ற இருள் சூழ்ந்ததாக அமைந்துவிட்டது."

இவ்வாறு குறிப்பிடும் மகஜர் ஒன்றை அக்கரைப்பற்று பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளது.

பிரஜைகள் குழுவின் போஷகரும், அம்பாறை மாவட்ட பௌத்தபீடத் தலைவருமான சங்கைக்குரிய வறக்காப்பொல ஸ்ரீரத்ன தேரோ, பிரஜைகள் குழுத் தலைவர் ஜனாப். ஏ. எம். அகமட் லெவ்வை, செயலாளர் திரு எஸ். ஐ. மூர்த்தி ஆகியோர் மகஜரில் கையெழுத்திட்டுள்ளனர்.

# லீவு எடுக்காத ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சையில் சலுகை

## ஆசிரியர் பதவி புனிதமான தொண்டுஎன்கிறார்பணிப்பாளர்

வட்டுக்கோட்டை, ஏப்.7

லீவு எடுக்காத அதிபர், ஆசிரியர்கள் நேர்முகப் பரீட்சைகளுக்குத் தோற்றும் போது அவர்களுக்கு முன்னுரிமை வழங்க நான் தீர்மானித்துள்ளேன். இத்தகைய அதிபர் ஆசிரியர்களுக்கு பரீட்சை வேலைகளில் இடம் கொடுப்பதோடு ஏனைய துறைகளிலும் முன்னுரிமை கொடுக்கத் தீர்மானித்திருக்கின்றேன் எனவே அதிபர், ஆசிரியர்கள் கல்வியை வியாபாரமாகக் கொள்ளாது புனிதமான ஒரு தொண்டாகக் கருதிச் சேவையாற்ற வேண்டும்.

வட்டுக்கோட்டை வட்டாரப் பாடசாலை அதிபர்கள் சங்க விசேஷ கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா தலைமையில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் இக்கூட்டம் நடைபெற்றது.

கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:–

இன்றைய யாழ்ப்பாணம் எல்லாவற்றையும் இழந்து விட்டது. ஆனால் கல்வி ஒன்றுதான் மயிரிழையில் தப்பி இருக்கின்றது இதை நாம் வளர்க்க வேண்டும். இதற்காகத் தியாகங்கள் செய்யவேண்டும்.

மாணவர்கள் தமது சிந்தனைகளை வெளிக்கொணர மொழி அறிவு அவசியம்.

மொழியை இலக்கணப் பிழையின்றிமாணவர்கள் கற்கவேண்டும். ஆசிரியர்களும் இலக்கணத்தில் தெளிவான அறிவை [illegible] காக வட்டார ரீதியாக [illegible] இலக்கணக் கருத்தரங்குகள்

நடத்தவும் தீர்மானித்திருக்கின்றேன்.

இப்படி அவர் கூறினார்.

வடமாகாண அதிபர்கள் சங்கத்தலைவரும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபருமான திரு. க. அருணாசலம் நன்றி தெரிவித்தார்.

## சம்மாந்துறையில் 2000 மீனவர் குடும்பங்கள் பாதிப்பு

அம்பாறை, ஏப். 7

கிழக்கு கடற் பிரதேசத்தில் கோமாரிவரை கடல் பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தப்பட்டு உள்ளதால், சம்மாந்துறைத்தொகுதி மீனவர் கூட்டுறவுச் சங்கப் பிரிவிலுள்ள சுமார் இரண்டாயிரம் மீனவ குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இது குறித்து மீனவர் கூட்டுறவுச் சங்கம், கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேராவுக்கு மகஜர் அனுப்பி உள்ளது.

மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள தற்போதைய பாதிப்புக்கு நிவாரணம் அளிக்குமாறும், அவர்களுக்கு நிரந்தர வருமா[illegible] வல்லகைகளுக்கு ஆவன [illegible] வலியுறுத்தப்பட்டுள்ளது

## புங்குடுதீவு நூலகத்துக்கு புத்தகங்கள்

புங்குடுதீவு, ஏப். 7

புங்குடுதீவு பொது நூலகத்துக்கு பத்தாயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் புங்குடுதீவு உப அலுவலகத்தினால் இந்நூலகம் நிர்வகிக்கப்படுகிறது.

வெகு விரைவில் இப்புதிய நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு விடுமென யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபையின் புங்குடுதீவு உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு பொன் லவரமூர்த்து தெரிவித்தார்

## சுவாமி சாந்தானந்தாவின் உள்ளத்தை உருக்கும் பாடல்

திவ்ய ஜீவன சங்க ஸ்தாபகர் ஸ்ரீமத். சுவாமி. சிவானந்தரின் பிரதம சிஷ்யர்களிலொருவரும் உலகனாவிய சிவா குடும்ப அமைப்பு, மலேஷியா, சிங்கப்பூர், கோயம்புத்தூர் போன்ற இடங்களில் அமைந்துள்ள நுண்கலைக் கோயில்களின் ஸ்தாபகருமாகிய ஸ்ரீமத். சுவாமி சாந்தானந்தாவின் பிறந்த தினத்தை இன்று உலகெங்கும் உள்ள சிவா குடும்ப அங்கத்தவர்களும், பக்தர்களும் கொண்டாடுகின்றனர்.

சுவாமிஜி இலங்கைக்குப் பல தடவைகள் விஜயம் செய்து அநேக சதசங்கங்கள் நிகழ்த்தியுள்ளார்.

இவரது உள்ளத்தை உருக வைக்கும் பாடல்களால் பலர் கவர்ந்திழுக்கப்பட்டிருக்கின்றனர்.

சுவாமிஜி, கொழும்பு ராமகிருஷ்ண மண்டபம், கதிரேசன் மண்டபம், கேசவன் மண்டபம்' கொள்ளுப்பிட்டியிலுள்ள கிறிஸ்தவ தேவாலயம் போன்றவற்றில் சமயச் சொற்பொழிவுகள் பலவற்றை ஆற்றியுள்ளார்.

கொழும்பில் 'எலிபாங்க்' வீதியில் சுவாமிஜி ஓர் ஆராதனை மண்டபத்தையும் தொடக்கி வைத்துள்ளார்.

சுவாமிஜி ரிஷிகேசத்தை விட்டு உலக மக்களுக்குச் சேவை செய்யும் எண்ணத்துடன் புறப்பட்ட வேளையில் முதன்முதலில் இலங்கைக்கு விஜயம் செய்தது குறிப்பிடத்தக்கது.

அப்போது தொடர்ச்சியாக ஒன்பது நாட்கள் திவ்ய ஜீவன சங்கத்தில் ஆத்மீகப் பயிற்சிகள் சத்சங்கங்கள் பலவற்றையும் நிகழ்த்தினார்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பல பாடசாலைகளுக்கும் விஜயம்செய்து மாணவர்கள் மத்தியில் ஆத்மீக எழுச்சியை ஏற்படுத்தினார்.

1981ஆம் ஆண்டில் வரெழு கண்ணகை அம்மன் கோயில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் வந்த பொழுது திருநெல்வேலியிலுள்ள ராமகிருஷ்ணாலயத்துக்கு விஜயம் செய்து சத்சங்கம் ஒன்றை நிகழ்த்தினார்.

கண்ணகை அம்மன் கோயில் கும்பாபிஷேகத்தின் பின் அங்கு நீண்ட சொற்பொழிவொன்றைத் தமிழில் ஆற்றி பக்தர்களைப் பக்திப் பரவசத்தில் ஆழ்த்திச் சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ், இந்தி, ஆங்கிலம்
ஒரிஜினல் வீடியோ பிரதிகளை
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
*
வீடியோ விஷன்
213, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 22477

# உதயன்

07 04. 1986 திங்கட்கிழமை

பிறந்த நாள்—திருமண வைபவங்கள்,
பூப்புனித நீராட்டு விழா—புதுமனை புகு விழா
போன்ற மங்கல வைபவங்களைத்
தத்ருபமாக ஒளிப்பதிவு செய்துகொள்ள
*
வீடியோ விஷன்
213, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T'Phone: 22477

# 'மனிதப் பந்து'களாக தமிழ் அகதிகள்

## லண்டன் 'கார்டியன்' கூறுகின்றது

லண்டன், ஏப். 6 பிரிட்டனில் தஞ்சம் மறுக்கப்படும் இலங்கைத் தமிழ் அகதிகள் பிரிட்டனுக்கும் ஏனைய நாடுகளுக்குமிடையில் பறந்து திரியும் 'மனிதப் பந்துகளாக மாற்றப்பட்டுள்ளார்கள்.

பிரிட்டிஷ் நாளிதழ் கார்டியன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

பிரிட்டன், பிரான்ஸ், ஜமெய்க்கா, பஹாமாஸ், இந்தியா ஆகிய நாடுகளுக்கு இடையே திரும்பத் திரும்பச் சென்ற இலங்கைத் தமிழ் அகதிகளின் பட்டியல் ஒன்றை பிரிட்டிஷ் தமிழ் அகதிகள் ஸ்தாபனம் தயாரித்துள்ளது.

ஸ்தாபனத்தின் பேச்சாளரான திரு. பாட்மயில்வாகனம் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் சொன்னதாவது:

பிரிட்டனுக்குள் நுழையும் இலங்கையருக்கு கட்டாய விஸா பெறவேண்டும் என்ற நிபந்தனையை பிரிட்டன் கடந்த மே மாதத்தில் அறிமுகப் படுத்தியது.

தமிழ் அகதிகள் நாடு விட்டு நாடு செல்ல இதுவே காரணம் ஆகியது.

அகதிகளுக்குப் பாதுகாப்பான முதல் இடம் பிரிட்டன் அல்ல.

இந்த அடிப்படையில் பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு தஞ்சம் கோருபவர்களின் விண்ணப்பங்களை நிராகரித்து விடுகிறது.

விஸா பெறவேண்டும் என்ற நிபந்தனை அகதிகள் நேரடியாக பிரிட்டனுக்கு வருவதற்கு முட்டுக்கட்டையாகவுள்ளது.

தஞ்சம் கோருபவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவது மிக அதிகமாக உள்ளது. விஸா தேவை என்று விண்ணப்பிப்பதே, விண்ணப்பதாரர்களை ஆபத்துக்கு ஆளாக்கிவிடும்.

விஸா இன்றி கொழும்பில் பிரிட்டனுக்கு விமானம் ஏறுவது சாதாரணமாக நிற்பாட்டப்பட்டுள்ளது.

ஒரு சம்பவத்தில் திரு. முருகேசன் சிவகணேசன் என்பவர் இந்தியாவில் இருந்து கடந்தமே மாதத்தில் பிரிட்டன் வந்தார்.

முறையிட்டைத் தொடர்ந்து அவருக்கு பிரிட்டனில் தங்க தற்காலிக அனுமதி வழங்கப் பட்டது.

இந்த ஆண்டு பெப்ரவரி 14இல் பிரிட்டிஷ் உள்துறை அலுவலகத்தினால் இவர் பம்பாய்க்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இந்தியாவுக்குள் பிரவேசிக்க இவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. லண்டனுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். மீண்டும் பிரிட்டனில் தங்க தற்காலிக அனுமதி வழங்கப்பட்டது.

இப்போது மீண்டும் அவரைப் பம்பாய்க்கு அனுப்ப அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

சில சம்பவங்களில் பிரிட்டனில் இருந்து வெளியேற்றப்படும் அகதிகளுக்கு வேறு நாடுகள் தஞ்சம் அளிக்க மறுக்கின்றன.

இதனால் அவர்கள் மீண்டும் இலங்கைக்கு நாடுகடத்தப்படும் அபாயம் ஏற்படுகின்றது.

அதுமட்டுமல்ல, தஞ்சம் அடையும் முயற்சிக்கு பங்கமும் ஏற்படுகின்றது.

திரு. சிவதாஸ் சபாரத்தினம் ஜமெக்காவிற்கு இரண்டுதரம் திருப்பி அனுப்பப்பட்டார். இரண்டாம் முறை அவருக்கு கொழும்புக்குச் செல்ல டிக்கெட் கொடுக்கப்பட்டது.

அவர் அந்த டிக்கெட்டைக் கிழித்தெறிந்தார். லண்டனுக்குத் தான் செல்வேன் என்று வற்புறுத்தினார்.

ஜமெக்காவினுள் திரு. சபாரத்தினம் அனுமதிக்கப்பட மாட்டார் என்று ஜமெக்கா தூதரகம் பிரிட்டனின் உள்துறை அலுவலகத்துக்கு கடிதம் அனுப்பியிருந்தது.

இதனால் தற்காலிகமாக லண்டனில் தங்க திரு. சபாரத்தினம் அனுமதிக்கப்பட்டார்.

பிரிட்டிஷ் உள்துறைச் செயலாளர் திரு லியோன் பிரிட்டன் கொடுத்த உறுதி மொழிக்கு முரணாக தஞ்சம் கோரும் தமிழ் அகதிகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவதால் பாதிப்பு ஏற்படும் என்று பயப்படும் தமிழர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என்பதே பிரிட்டிஷ் உள்துறைச் செயலாளர் அளித்த உறுதி.

## சிருடை ஏலவிற்பனை திடீரென ரத்து

கொழும்பு, ஏப் 7 கட்டுநாயக்கா விமான நிலையத்தில் பாதுகாப்புப் படையினர் பாவித்துக் கழித்த சீருடைகளை ஏலத்தில்விற்பனை செய்வது திடீரென்று நிறுத்தப்பட்டது.

கடந்த சனிக்கிழமை இந்த ஏல விற்பனை நடைபெறுவதாய் இருந்தது.

இச்சீருடைகள் பிழையானவர்களின் கைகளுக்குப் போய்விடும் என்ற காரணத்தினால் தான் ஏலவிற்பனை திடீர் ரத்தானது என்று தெரிகிறது.

## 125 மாணவருக்கு ஒரு ஆசிரியர்

யாழ்ப்பாணம், ஏப் 7 பூநகரி தம்பிராய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் தற்போது சுமார் 125 பிள்ளைகள் கல்வி பயில்கின்றனர்.

அங்கு ஒரே ஒரு ஆசிரியர் மட்டும் அரச வேதனத்தில் கல்வி கற்பிக்கின்றார்.

முன்னர் இப்பாடசாலையில் நான்கு ஆசிரியர்கள் வரை பணியாற்றி வந்தனர்.

வட்டாரக் கல்வி அதிகாரி இப்பாடசாலைக்கு விஜயம் செய்தபோது பொதுமக்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு முறையிட்டனர்.

விரைவில் உரிய நடவடிக்கை எடுத்து உங்கள் பிரச்சினை தீர்க்கப்படுமென அப்போது அவர் உறுதி அளித்தார்.

## தையல் பயிற்சி நிலையம் திறந்து வைப்பு

சாவகச்சேரி, ஏப்ரல் 7 நுணாவில் மேற்கு அம்பாள் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க ஆதரவில் தையல் பயிற்சி நிலையம் ஒன்றை யாழ் செயலகத் தலைமை உதவி அரசாங்க அதிபர் திரு. கே. கோபாலரத்தினம் திறந்து வைத்தார்.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. கே. துரைராசா, நகராட்சி மன்றச் செயலாளர் திரு த. நவரத்தினராசா ஆகியோர் மங்கள தீபங்களை ஏற்றி வைத்தனர்.

மாதர் சங்கத் தலைவி திருமதி. ஏ. தண்டாயுதபாணி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. கோபாலரத்தினம் உரையாற்றுகையில்.இன்றைய காலகட்டத்தில் சமூக, பொருளாதார முன்னேற்றத்துக்குபெண்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானது என்றார்.

யாழ் மாவட்ட கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு க. ஜீவரத்தினமும் உரையாற்றினார்.

## குர்ஆன் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.7 அகில இலங்கை கதிப் மார்கள் சம்மேளனத்தின் சார்பில் யாழ் மாவட்ட பெரியகடை முஸ்லிம் லீக்கினரின் அனுசரணையுடன் முஸ்லிம் சிறுவர், சிறுமியர்களுக்கு குர்ஆன் பிரதிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

அகில இலங்கை கதிப் மார்கள் சம்மேளனத்தின் தலைவரும் யாழ் பல்கலைக் கழக அரபு இஸ்லாமிய நாகரிகத்துறையின் விரிவுரையாளருமான மௌலவி. அல்ஹாஜ். கே. எம். எச். காலிதின் இவ்வைபவத்தில் உரையாற்றினார்.

திருக்குர்ஆன் பிரதிகளை பெரியகடை ஜும்மா மஸ்ஜிதின் பிரதித் தலைவர், ஜனாப். முஹம்மது வாப்பு, நம்பிக்கையாளர் சபை உறுப்பினர் ஜனாப். எம். ஸாஹுல் ஹமீத், முஸ்லிம் லீக் கிளையின் தலைவர் கே. சனூன் ஆகியோர் அன்பளிப்புச் செய்தனர்.

முஸ்லிம் லீக் கிளையின் செயலாளர் ஜனாப். எம். எம். நஜீப் நன்றியுரை கூறினார்.

# உண்மையான மத்தியஸ்தரின் நடைமுறையை இந்தியா கடைப்பிடிக்கவில்லை

## ஐ. நா வில் முறையிட்டது குறித்து அத்துலத் கருத்து

கொழும்பு, ஏப்ரல் 7 மத்தியஸ்தராக இருந்து கொண்டு இந்தியா, ஐ. நா. மனித உரிமைக் கமிஷன் முன் இலங்கை பற்றி முறையிட்டது. உண்மையான மத்தியஸ்தரின் நடைமுறைக்கு மாறாக இருந்தது.

இப்படி தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி சொன்னார்.

கொழும்பு ஆங்கிலத் தினசரிக்கு அளித்த பேட்டியில் அமைச்சர் மேலும் சொன்னதாவது:

இந்தியா, இலங்கையை பலவீனப்படுத்த முயல்கிறது என்று பலர் அபிப்பிராயப்படுகின்றார்கள். அப்படி எண்ணுபவர்களில் நான் ஒருவன் அல்ல.

தீவிரவாதிகளுக்கு தமிழ் நாட்டில் தளம் அமைக்க அனுமதிக்கப்பட்டதன் மூலம் தான் இலங்கை பலவீனப்படுத்தப்படுகின்றது.

கடந்த சில வாரங்களாக மோசமடைந்து வரும் இலங்கை – இந்திய உறவு, இரு நண்பர்களுக்கு இடையேயான விஷயம் போன்றது.

நண்பர்களுக்கு இடையில் இப்படி நடைபெறுவது வழக்கம்.

தனது இறைமை, சுதந்திரம் முதலியவற்றைப் பாதுகாக்க நிறையப் பணம் செலவழிப்பதினால் எந்த நாடும் வங்குரோத்தாகப் போவது இல்லை.

யூனியன் பிரதேச அந்தஸ்து கொடுப்பது போன்ற யோசனை அரசிடம் உள்ளது என்ற செய்தி சரியானது அல்ல.

தேவை ஏற்பட்டால் அந்த யோசனையை ஆராய்வதால் ஒன்றையும் இழக்கப்போவது இல்லை.

அரசாங்கம் இனி என்ன செய்யப் போகின்றது என்பது பற்றி நாம் இப்போது விளம்பரம் செய்ய முடியாது.

இப்படி திரு அத்துலத் முதலி சொன்னார்.

# இலங்கை வெற்றி

கொழும்பு, ஏப் 7 ஆசிய கிண்ணத்துக்கான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் நேற்று பாகிஸ்தானை இலங்கை தோற்கடித்தது.

இலங்கை 5 விக்கெட் இழப்புக்கு 42 2 ஓவர்களில் 192 ஓட்டங்களைப் பெற்றது.

பாகிஸ்தான் 9 விக்கெட் நஷ்டத்துக்கு 45 ஓவர்களில் 191 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அர்ஜுன ரணதுங்காவும், அரவிந்த சில்வாவும் சிறப்பாக ஆடி இலங்கையின் வெற்றிக்கு வழி கோலினர்.

# மாணவர்கள் தொழில் நுட்பக் கல்வி பெற ஆசிரியர் உதவ வேண்டும்

மானிப்பாய், ஏப். 7 ஒவ்வொரு மாணவனும் 16 வயது வரை பாடசாலையில் வழிப்படுத்தப்படுகின்றான். அதன் பின் பல்கலைக் கழக அனுமதி கிடைக்காது போகவே வழி மாறுகின்றான். மாணவர்கள் தொழில் நுட்பக் கல்வி பெற்று வாழ்க்கைக்கு ஏற்ற தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள வசதி செய்வது ஆசிரியர்களின் கடமை.

உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற மானிப்பாய் கல்வி வட்டார அதிபர்கள் கூட்டத்தில் உரையாற்றிய யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் திரு. ஆர். இராஜேந்திரா இவ்வாறு கூறினார்.

மானிப்பாய் கல்வி வட்டார அதிகாரி திரு.எஸ். தனஞ்செயன் தலைமையில் கூட்டம் நடந்தது.

கூட்டத்தில் திரு. இராஜேந்திரா மேலும் பேசியதாவது:

தொழில் நுட்பம்,வணிகம், பொறியியல் துறைகளில் நடைபெற்றுவரும் பல பயிற்சி நெறிகளுக்கு போதிய மாணவர்கள் சேராததால் அவற்றை மூடவேண்டிய நிலையில் நாம் உள்ளோம்.

இத் தொழில் நுட்பக் கல்லூரிக்கென பல லட்சம் ரூபாக்களை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

அவற்றைப் பயன்படுத்தி மாணவர்கள் தொழில் நுட்ப அறிவைப் பெற்றுக் கொள்ள முன்வர வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

# இந்தியஅணுகு . . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

கவே சிங்களத் தலைமை உறுதி பூண்டுள்ளது.

கேள்வி: இலங்கை அரசுக்கும் தமிழர் பிரதிநிதிகளுக்கும் இடையே நடந்த பேச்சுக்களில் நீங்கள் கொண்டுள்ள அபிப்பிராயம் என்ன?

பதில்: சமாதானப் பேச்சுக்கள் பிரயோசனமற்றவை. உலகை ஏமாற்ற ஜெயவர்த்தனா அரசாங்கத்தினால் நடத்தப்பட்ட நாடகமே இது.

சமாதானத்தின் அன்பனாகக் காட்டிக் கொண்டாலும் அமைதித் தீர்வு காணுவதில் ஜெயவர்த்தனாவுக்கு நாட்டம் இல்லை.

அதனால் தான் தமிழரின் அரசியல் அபிலாஷைகளை பூர்த்தி செய்யக் கூடிய தான யோசனைகளைச் சமர்ப்பிக்க ஜெயவர்த்தனா தவறிவிட்டார்.

சமாதானப் பேச்சு என்ற போர்வையில் தமிழ் மக்கள் மீது இராணுவ பயங்கரமும் இனப்படுகொலை அழிவும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

கேள்வி: சில காலத்துக்கு முன்னர் நீங்கள் சொன்னீர்கள், யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தி ஜெயவர்த்தனா அரசு இராணுவ பலத்தினை அதிகரித்துக் கொண்டது என்று.

பதில்: உண்மையில் அது தான் நிலை. சிங்கள இனம் முழுவதுமே யுத்த நிலைக்கு அரசாங்கத்தினால் தயாராக்கப்பட்டு உள்ளது. தமிழர் பகுதிகளில் புதிய இராணுவ முகாம்கள் நிறுவப்பட்டு உள்ளன. வெளிநாட்டுக் கூலிப்படைகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

கேள்வி: அமைதிப் பேச்சுக்கள் தோல்வி அடைந்து விட்டன என்று கருதுகின்றீர்களா?

பதில்: சாதகமான முடிவுகளை தரமுடியாது பேச்சுக்கள் தோல்வி கண்டன.

கேள்வி: பேச்சுக்கள் மூலம் தீர்வு காணும் சாத்தியக்கூறு எதுவுமே இல்லையா?

பதில்: இந்தியாவின் நிலையில் தான் தங்கியுள்ளது.

கேள்வி: இரத்தக்களரியை நிறுத்தக் கூடிய முறையில் பேச்சுக்கள் மூலம் தீர்வு காணும் நம்பிக்கை உங்களுக்கு உண்டா?

பதில்: ஓர் உண்மையான தீர்வுக்கு ஜெயவர்த்தனா வரமாட்டார் என்பதைக் கடந்தகால அனுபவம் சரித்திரம் கூறுகின்றது. தான் சமாதானவிரும்பி என்பதைக் காட்டவே ஜெயவர்த்தனா இந்த நாடகத்தை ஆடுகிறார்.

ஜெயவர்த்தனாவின் பிடிவாதமான கண்டிப்பான போக்கினால் இந்திய அரசுதான் விரும்பியதை அடையமுடியாத்நிலை ஏற்பட்டு உள்ளது.

இச்சூழ்நிலையில் நாம் ஒன்றும் செய்ய முடியாத நிலைமைக்கு வந்து விட்டோம்.

இரண்டு பக்கத்தையும் ஒன்று சேர்க்க இந்தியா முயற்சி எடுக்கவேண்டும்.

இந்தியா கடுமையாக முயற்சிக்க வேண்டும்.

கேள்வி: ரொமேஷ் பண்டாரியுடன் பேசிய போது இதைச் சொன்னீர்களா?

பதில்: ஆம் நாம் சொன்னோம்.

கேள்வி: பேச்சுக்கள் மூலம் தீர்வு காணும் வாய்ப்பு மிகக் குறைவாக உள்ளது. பேச்சுக்கள் dead end நிலைக்கு வந்து விட்டது.

இந்த இடைவெளியில் ஆயுதப்படைக்கு எதிரான கெரில்லா நடவடிக்கைகளை மீண்டும் தொடங்குவீர்களா?

பதில்: இப்போது யுத்தம் நடைபெறவில்லை. நாம் தாக்கப்பட்டால் எம்மைப் பாதுகாப்பதில் தான் ஈடுபட்டுள்ளோம். தாக்குவதற்கு நாம் போவது இல்லை.

கேள்வி: தமிழர் பிரச்சினைபற்றி இந்தியஅணுகுமுறை பற்றி நீங்கள் திருப்தி அடைகிறீர்களா? இருதரப்புக்கும் இடையேயான மத்தியஸ்தர் என்ற முறையிலும் இந்தியாவின் பங்கு பற்றி திருப்தி அடைகிறீர்களா?

பதில்: மத்தியஸ்தம் செய்பவர் என்ற முறையில் இந்தியா உண்மையான முயற்சிகளை எடுத்து உள்ளது. இந்தியாவின் அணுகுமுறை எமக்கு திருப்தி அளிக்கிறது. ஆனால் ஜெயவர்த்தனாவின் அணுகுமுறை எமக்குத் திருப்தி அளிக்காது.

ஜெயவர்த்தனாவின் பிடிவாதப் போக்குத் தான் இந்திய முயற்சிகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது.

கேள்வி: தமிழர் பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ளப் படக் கூடிய தீர்வு ஒன்றைக் காணுவதில் இந்தியா எப்படியான பங்காற்ற வேண்டும் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள்?

பதில்: அடக்கப்பட்ட மக்களின் சுதந்திரத்திற்காக இந்திய மக்கள் உலகில் என்றும் குரல் கொடுத்து வருபவர்கள்.

நீதி, மனிதத்தன்மை ஆகிய இலட்சியங்களை இந்திய மக்கள் போற்றுபவர்கள். பலஸ்தீனம், நமிபியா, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளின் விடுதலைப் போராட்டங்களுக்கு இந்திய மக்கள் ஆதரவு அளித்துள்ளனர். பொலிஸாரியோ விடுதலை இயக்கத்தை இந்தியா அண்மையில் அங்கீகரித்துள்ளது.

தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவும் தனது அயல்நாட்டில் நடத்தப்படும் சுதந்திரப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கவும் இந்திய மக்கள் முன்வருவார்கள் என்று உளமார நம்புகின்றேன்.

# ஹெலிக்கொப்டர் தாக்குதல்களை அடுத்து வாகன பாதை மாற்றம்

பலாலி, ஏப்ரல் 7 அடிக்கடி வயாவிளான், குரும்பசிட்டி, கட்டுவன் பகுதிகளில் ஏற்படும் ஹெலிக்கொப்டரின் தாக்குதல் சம்பவத்தாலும், இராணுவத்தினர் அவ்விடங்களில் வந்து நின்று மறைந்திருந்து திடீரெனத் தாக்கும் சம்பவத்தாலும் அப்பகுதிகளினூடாக மக்கள் தமது போக்குவரத்தினை மேற்கொள்ள அஞ்சுகின்றார்கள்.

அச்சுவேலியில் இருந்து மூளாய் செல்லும் தனியார் போக்குவரத்துச் சேவையின் பாதை – இக்காரணத்தால் மாற்றப் பட்டுள்ளது.

அச்சுவேலியில் இருந்து வயாவிளான் சந்திக்குச் செல்லாது தோலகட்டி சந்தியூடாக வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் முன்னுள்ள யாழ்ப்பாண வீதிக்குச் சென்று – அர்ப்பைச்சந்தியூடாக, குப்பிளான் ஏழாலையூடாக கட்டுவன் – மல்லாகம் வீதிக்குச் சென்று உட்பாதை வழியாக தெல்லிப்பழைக்கும் பின்னர் மூளாய்க்கும் செல்லவுள்ளது என – வலி கிழக்கு தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவர் திரு. மதனசேகரம் தெரிவித்தார்.

# விமானமோட்டிக்கு ரூ. 27,000 அபராதம்

கொழும்பு, ஏப். 7 3 மணித்தியாலம் தாமதித்து விமான நிலையம் வந்த விமானமோட்டிக்கு 27,000 ரூபா அபராதமும் பதவி இறக்கமும் தண்டனையாக வழங்கப் பட்டன.

எயர் லங்கா விமான நிறுவனமே இதனை வழங்கியது.

மார்ச் மாத நடுப்பகுதியில் சிங்கப்பூரில் இருந்து எயர் லங்கா விமானம் ஒன்று கொழும்பு நோக்கிப் புறப்படவிருந்தது.

புறப்பட வேண்டிய நேரத்தில் இருந்து 3 மணித்தியாலங்கள் தாமதமாகவே விமானமோட்டி சிங்கப்பூர் விமான நிலையம் வந்தாரம்.

இதனால் 134 பயணிகளுக்கு எயர் லங்கா நிறுவனம் சிற்றுண்டி வழங்கி உபசரிக்க வேண்டியிருந்தது.

தாமதமானது, பயணிகளுக்குச் சிரமம் கொடுத்தது ஆகியவற்றுக்காக விமானமோட்டிக்கு 27,000 ரூபா அபராதத்துடன் பதவி இறக்கமும் தண்டனையாக வழங்கப் பட்டது.

முதலாவது கப்டன் பதவியில் இருந்து விமானமோட்டி, இரண்டாவது கப்டனாகப் பதவி இறக்கப்பட்டார்.

## காயமடை . . . .

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

காயம் ஏற்பட்டது.

(6) பத்மநாதன் சுகந்தன் (17வயது) அரியாலை.

பரீட்சைப் பெறுபேறுகளை எடுத்து வரும்போது இவரது முதுகில் காயம் ஏற்பட்டது,

(7) அ. சுந்தரி (30 வயது) குருநகர்.

(8) அலெக்ஸ்சாண்டர் பிரான்சிஸ் (26 வயது) குருநகர்.

இவருக்கு இரண்டு கால்களிலும் காயம் ஏற்பட்டது.

(9) என் யோகேஸ்வரன் (19 வயது) யாழ்ப்பாணம்.

மேலும் காயமடைந்த சிலர் தனியார் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## யாழ் நகரில் . . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

நேரமாக நடைபெற்ற இச்சம்பவத்தினால் நகரில் பெரும் பதற்றம் நிலவியது. கடைகள் இழுத்து மூடப்பட்டன. மக்கள் சிதறி ஓடினார்கள்.

நகரவீதிகளில் மேற்றிய போராளிகள் நடமாடித் திரிவதைக் காணக்கூடியதாய் இருந்தது.

## யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.7 யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 30 மணிக்கு சங்கத் தலைவர் திரு. ஆ. ந இராசேந்திரன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

கூட்டத்தைத் தொடர்ந்து மதிய போசன விருந்தும், பிற்பகலில் கல்லூரி வீரர்களுக்கும், பழையமாணவர்களுக்கும் இடையிலான மட்டுப்படுத்தப் பட்ட கிரிக்கெட் ஆட்டமும் நடைபெறும்.

## திருநெல்வேலியில் அந்தர் யோகம்

யாழ்ப்பாணம், ஏப்.7 எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 00 மணி அளவில் திருநெல்வேலி ராமகிருஷ்ணலயத்தில் சுவாமி சிகருபானந்தாவினால் அந்தர் யோகம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

12 வயதுக்கு மேற்பட்ட ஆண்—பெண் இருபாலாரும் அந்தர்யோகத்தில் [illegible] முடியும் என்று ராம[illegible] ளர் இரா. மகேந்திரசிங்கம் தெரிவித்தார்.

## கோண்டாவில் . . .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

வானில் வந்த 10க்கும் மேற்பட்ட இனந்தெரியாதோர் ஆயுதங்களைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு வீட்டினுள் நுழைந்தனர்.

பின்னர் வீட்டிலிருந்த ஆண், பெண் அனைவரையும் அறையொன்றினுள் விட்டுப் பூட்டினர்.

ஐந்துலட்சம்ரூபாபெறுமதியான 4 வீடியோ கமெராக்கள், 4 வீடியோ டெக்குகள், நாஷனல்டெக்,ரேடியோ டெக் போன்றவற்றையும் ஒருதொகைப் பணத்தையும் கொள்ளையடித்தனர்.

இதனையடுத்தே நேற்று வீதித்தடை ஏற்படுத்தப் பட்டது. வீதியின் குறுக்கே கலோக அட்டைகளும் வைக்கப்பட்டிருந்தன.

இதனால் பலாலி வீதியில் நேற்று வாகனப் போக்குவரத்துத் தடைப் பட்டது.

நீர்வேலி வீதித்தடை காரணமாக நேற்றுபருத்தித்துறை வீதியிலும் போக்குவரத்துத் தடைப் பட்டது. வாகனங்கள் இராசபாதையூடாகச் சென்றன.

வீதியின் குறுக்கே பெரிய மரக்கட்டைகளும் கற்களும் போடப்பட்டு மக்கள் வீதியின் குறுக்கே அமர்ந்திருந்தனர்.

நீர்வேலி வர்த்தகர் ஒருவரின் வீட்டில் நடந்த [illegible] ஆட்சேபித்தே இந்தவீதித்தடை போடப்பட்டது.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷப்ரூ உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட்,207 ,மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,2 ஆம் ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
வெளியிட்ட திகதி 07-04-1986
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under number QJ60 N 86

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org